குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.158/2024

அ.சா.4

2025–ம் ஆண்டு ஜீன் 17–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 06.37 மணி,

Accused Mariyappan @ Meenkara Mariayappan present. Advocte Mr.I.Jayakumar present for accused. APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் பிருந்தாவன் நகர் 8 வது வீதியில் குடியிருந்து, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தெரியும். அ.சா.2 தில்லைக்கரசி அ.சா.1–ன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார். கடந்த 06.05.2024 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது அருகில் இருந்தவர்கள் பால்ராஜ் வீட்டில் வாடைக்கு குடியிருக்கும் நபரின் வீட்டில் திருடுபோய்விட்டதாக அங்கு கூட்டமாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது, பால்ராஜ்க்கு சொந்தமான அந்த வீட்டின் கதவு, ஜன்னல், ஆகியவற்றை உடைத்து, உள்ளே இருந்த பீரோ உடைந்த நிலையில் இருந்தது.

2.அதன்பின்பு போலிசார் வந்து விசாரித்து, சம்பவ இடத்தை அளவெடுத்து, அதன்பின்பு ஒரு தாளில் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னுடன் கையெழுத்து போட்ட இன்னொரு நபர் யாரென்று எனக்கு நினைவில் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:58:33 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரி. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் போலிசார் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரி. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் : மாலை 06.42 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.06.17 18:58:37 +0530